கூவம் ஆற்றின்மீது பூவிருந்தவல்லி—பட்டாபிராம் சாலையில் உள்ள பழுதடைந்த பாலம்.

*வினா எண். 467—திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூவிருந்தவல்லி—பட்டாபிராம் சாலையில் உள்ள கூவம் ஆற்றின் மீது கட்டப்பட்ட பாலம் உடைந்திருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) எப்போது அப்பாலம் செப்பனிடப்படும்?

(இ) அதன் மதிப்பீட்டுத்தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) (ஆ) மற்றும் (இ) இப்பாலத்தை ரூ. 55 இலட்சம் மதிப்பீட்டில் திருத்தி அமைக்கத் தலைமைப் பொறியாளரால் அனுப்பப்பட்டுள்ள செயற் குறிப்பு அரசின் தீவிர பரிசிலனையிலே இருக்கிறது.

திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கடந்த நான்காண்டுக் காலத்திற்கு முன்பு 12 இலட்சம் ரூபாயிலிருந்து, இப்பொழுது 55 இலட்சம் ரூபாய்க்குத் திருத்தி அமைப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டாவது அந்த வேலை துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, பரிசிலனையில் இருக்கிறது என்று சொன்னேன். அதுவும் சாதாரண பரிசிலனை இல்லை, தீவிர பரிசிலனையிலே இருக்கிறது. ஆகவே, வெகு சீக்கிரமாக எடுக்கப்படும்.

திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படுமா என்று மாண்புமிகு அமைச்சரர்கள் அறிவிப்பார்களா? அவரே சொல்கிறார், தீவிர பரிசிலனை என்று. அந்தத் தீவிர பரிசிலனையின் கீழ் இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, ப. குறந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, தீவிர பரிசிலனை இந்த ஆண்டிலே முடிவடைந்தால் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும். தீவிர பரிசீலனை காலங்கடந்தால் கொஞ்சம் காலமாகும்.

1982 மார்ச் 11]

திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தீவிரம், அதிதீவிரம், தீவிரம் அல்லாதது என்று பிரச்னைகள் மூன்று விதமாகப் பிரிக்கப்படுகின்ற நேரத்தில் தீவிரம் என்றால் எத்தனை ஆண்டுகளாகும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப.குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, தீவிரம் என்பது சீக்கிரமாக விரைவாக, எவ்வளவு வேகமாகப் போக முடியுமோ அவ்வளவு வேகமாக.

ஸ்ரீவைகுண்டம் அருகேயுள்ள தாமிரபரணியில் மேல் உள்ள பாலம்.

*வினா எண் 468—திரு. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் ஸ்ரீவைகுண்டம், தாமிரபரணி ஆற்றின் குறுக்கேயுள்ள பாலம் மிகவும் குறுகலாக உள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதை விரிவுபடுத்தும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப.குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(முற்பகல் 9-30)

திரு. மு. அப்பாத்துரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் நெல்லை மாவட்டத்தில் மையப் பகுதியிலிருக்கிற காரணத்தால் அதிகமான போக்குவரத்து இருக்கிற காரணத்தால், குறிப்பாக, திருச்செந்தூர் ஆலயத்திற்குச் செல்ல வேண்டியவர்கள் இந்தப் பாலத்தின் வழியாகச் செல்ல வேண்டியிருப்பதால், வருங்காலத்திலாவது இந்தப் பாலத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாணபுமிகு திரு. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலத்தின் அகலம் இப்பொழுதே $5\frac{1}{2}$ மீட்டர் அளவுக்கு இருக்கிறது. ஆகவே, விரிவுபடுத்த வேண்டுமென்றால், முதலிலே பாலமே இல்லாத ஊர்களுக்குப் பாலம் அமைக்க வேண்டும். ஆகவே, இருக்கின்ற பாலத்தை விரிவு படுத்த வேண்டுமென்று சொன்னால், பாலம் இல்லாத ஊர்களுக்குப் பாலம் அமைக்கின்ற பணிகள் எல்லாம் முடிந்த பிறகுதான் இவைகளை எடுத்துக் கொள்வது நியாயமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.